# சமூகப் போராளி சாவித்திரிபாய் புலே

# Social Activist Savitribai Phule

***முனைவர் பு. இந்திராகாந்தி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி (த)
தஞ்சாவூர், இந்தியா

**Dr. P. Indhira Gandhi**
*Assistant Professor, Department of Tamil*
*Kunthavai Naacchiyaar Government Arts College for Women, Thanjavur, India*

## ஆய்வுச் சுருக்கம்

*தற்காலப் பெண்களின் வளர்ச்சியை கொண்டாடும் நாம் பதினெட்டாம் நூற்றாண்டில் பெண்களில் குரல் ஓங்க அவர்களது கரம் வளிமைபெற தன்வாழ்நாளை கொடுத்த சாவித்திரிபாபுலேவை அவதானிக்காது பெண்களின் வளர்ந்துவரும் வரலாற்றை எழுதிவிட முடியாது. குரலற்றவர்களின் குரலாக ஓங்கியொளித்த குரல் அவரது குரலாகும்.*

## Abstract

*Celebrating the development of modern women, we cannot write the history of women's development without observing Savitribai Phule, who gave her life to empower women in the eighteenth century.*

**Citation**

Indira Gandhi, P. "Social Activist Savitribai Phule." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 60-69.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095146*

*சமூகப் புரட்சியாளரான மகாத்மா ஜோதிராவ் புலேவின் மனைவி சாவித்திரிபாய் புலேவின் பங்கு பற்றிக் குறிப்பிடாமல் இந்தியப் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் கல்விக்காகவும் அவர்களை நவீனப்படுத்துவதற்காகவும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தின் வரலாற்றை விவரித்திட முடியாது.*

*சாவித்திரிபாய் புலே என்ற பெயரைக் கேட்டாலே ஒவ்வொரு பெண்ணின் மனதிலும் மத்தாப்பூ பூக்க வேண்டும் நெஞ்சம் பெருமிதம் கொள்ள வேண்டும்.இந்தியா சுதந்திரம் பெறாதக் காலகட்டத்தில் பெண்களுக்கு ஓட்டுரிமை இல்லாத நேரத்தில் பெண்களுக்கு கல்வி வேண்டும் என்று போராடியவர். இந்தியாவின் முதல் பெண் கல்வியாளர்.பெண் கல்வி பயிலக் கூடாது என்பது மரபாக இருந்த காலத்தில் பெண் கல்விக்காக தனது கணவர் ஜோதிபாவும் இவரும் இணைந்து பள்ளி அமைத்து அதில் ஆசிரியராக தாமே முன்னின்று கற்பித்து பெண்கள் கல்விக்கு ஒளியேற்றியவர்.இது மட்டுமல்ல அரசியல் கவிதை எழுதியப் புரட்சி பெண்ணும் இவரே.*

*பார்ப்பனர்கள், அவர்களோடு கூட்டுவைத்திருந்த சாதிகள் என மேல் தட்டுச் சமூகப் பிரிவுகள் மீது மட்டுமே கவனத்தைக் குவித்துவந்த ஒரு போக்குக்கு எதிராகச் சவால் விடுத்த ஒரு சமூகப் பண்பாட்டுப் போராட்டத்தில் சாவித்திரிபாய் முன் களத்தில் நின்றவர்.ஒடுக்கப்பட்ட சாதி மக்களுக்கும் காலம் காலமாக வகித்து வந்த அடிமைப்பாத்திரத்தை தூக்கியெறியும் படி அவர்களுக்கு நம்பிக்கையூட்டியவர். இன்னும் இன்னும் இருக்கிறது.இவரை பற்றி எழுதித்தீர்க்க*

**சாவித்திரிபாய் புலே பிறப்பு**

*1831-ஜனவரி மாதம் 3-ம் நாள் கான்டோசி நைவஸ் பட்டேல், லட்சுமி பாய் ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். மாகாராஷ்ட்டிர மாநிலத்தின் சதார மாவட்டத்தில் வசை விரார் என்ற நகரத்தின் அருகில் நைகோன் என்ற கிராமம் இவரது ஊராகும்.அங்கு பணக்கார விவசாயக் குடும்பம் இவரது குடும்பமாகும்.இவர் பெற்றோருக்கு ஆறாவது பிள்ளை. இவர் மாலி என்ற வகுப்பை சேர்ந்தவர். இந்த வகுப்பு வர்க்கத்தில் கொஞ்சம் தாழ்த்தப்பட்ட அடித்தட்டு வர்க்கமாகக் கருதப்பட்டது. இச்சமூகம், சமூகத்தாலும் கல்வியாலும் ஒடுக்கப்பட்ட சமூகமாக இருந்தது. ஆனாலும் சாவித்திரியின் தந்தை கிராமத்து தலைவராக இருந்தார்.*

**சாவித்திரிபாய் புலேயின் கல்வி**

*சாவித்திரியின் பெற்றோர் அப்போதைய வழக்கப்படி 1840-ல் அவரது ஒன்பதாவது வயதிலேயே பனிரெண்டு வயதுடைய ஜோதிராவ் புலே விற்கு திருமணம் செய்துவைத்தனர்.*

*சாவித்திரி பாய் தாழ்த்தப்பட்ட அடித்தட்டு வர்க்கத்தை சேர்ந்தவர் என்பதாலும் பெண் என்பதாலும் அவருக்கு கல்வி கொடுக்கப்படவில்லை. இங்கே வரலாற்றின் முக்கியமான ஒரு விடயத்தை நாம் கவனிக்க வேண்டும். பார்பனர்கள் தன்னைவிட தாழ்ந்த சாதி மக்களை கல்வி கற்க அனுமதிக்கவில்லை. அது மட்டுமின்றி சமூகத்தில் எந்த சாதியை சார்ந்த பெண்ணுக்கும் கல்வி கிடைப்பதைத் தடைசெய்தனர்.ஆனால் இயல்பிலையே கல்விமீது ஆர்வத்துடன் இருக்கும் தனது மனைவியை புரிந்துகொண்ட இவரின் கணவர் ஜோதிராவ் புலே திருமணத்திற்குப் பின் 1841-ல் தனது வீட்டிலேயே தானே யாருக்கும் தெரியாமல் சாவித்திரி பாய்க்கு எழுதப்படிக்கவும் சரளமாகப் போதிக்கவும் கற்றுக்கொடுத்தார்.*

*இது வீட்டிற்குத் தெரிந்தச் சூழலில் எதிர்ப்பெனும் பெரிய பூகம்பம் வெடித்தது. இருப்பினும் முயற்சியில் பின்வாங்காது நான்காண்டுகள் கல்வி கற்க ஏற்பாடு செய்து*

*கல்விகொடுத்தார். பின்னர் 1846-சாவித்திரிபாய் மூன்றாம் மற்றும் நான்காம் வகுப்பு தேர்ச்சியினை ஒரு சாதாரண பள்ளியில் எழுதி அதிக மதிப்பெண்பெற்று, அதிக மதிப்பெண் பெற்ற முதல் பெண் என்ற பெருமையையும் பெற்றார்.பின்னர் அகமதாபாத்தின் எம்.எஸ் பாரார் கல்வி நிறுவனத்தில் கணவர் ஜோதிராவ் புலே மூலமாக கல்விப் போதிக்கும் பயிற்சி பெற்றார்.*

**இந்தியாவில் தாழ்த்தப் பட்டோருக்கான முதல் பள்ளி**

*சாவித்திரிபாய்கல்விகற்றதும் இவர்கணவர்ஜோதிராவ்புலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், கல்வி மறுக்கப்பட்ட மக்களுக்கும், கல்வியைக் கொடுக்க ஏற்பாடு செய்தார். கணவன் மனைவி இருவரும் இணைந்து தாழ்த்தப் பட்ட மக்களின் பிள்ளைகளுக்கும்,பெண்களுக்கும் கல்வி தருவோம் என்று சபதம் கொண்டனர். அதனைச் செயல் படுத்தப் பள்ளியையும் தொடங்கினர். சாவித்திரிபாய் ஆசிரியப் பயிற்சி முடித்ததும் 1847-ம் ஆண்டு மே மாதம் முதல் நாள் மஹார்வாடா என்ற இடத்தில் சகுணாபாய் என்ற பெண் மற்றும் கணவர் ஜோதிராவ் புலேவுடனும் இணைந்து பெண்களுக்கான முதல் பள்ளியைத்துவங்கினார்.*

*சகுணாபாய் என்பவர் புரட்சிகரமான மிகுந்த முற்போக்கு கொள்கையுடையப் பெண்மணி இவரே ஜோதிராவ் புலேவின் வழிகாட்டி மற்றும் ஆசிரியர் ஆவார். இப்படியான இவர்கள் துவங்கியப் இப்பள்ளியில் முதலில் ஒன்பது பெண்குழந்தைகள்தான் இருந்தனர். ஆனால் இதே பள்ளியில் வருடக் கடைசியில் 45 பெண் குழந்தைகள் சேர்ந்திருந்தனர். இப்பள்ளியில் பெண்குழந்தைகள் சமூகத்தால் ஒடுக்கப்பட்டவர்கள் விதவைகள் மற்றும் வல்லுறவின் மூலம் பிறந்த குழந்தைகளைப் படிக்கவைத்தர்.*

**கல்வி நிறுவனங்கள்**

*சாவித்திரிபாய் புலே மற்றும் அவரது கணவரும் இணைந்து 1850 -ல் இரண்டு கல்வி நிறுவனங்களை நடத்தினார்கள். கல்வி நிறுவனங்களின் பெயர்கள் பெண்களுக்கானப் பள்ளி* (Native Female School) *மற்றும், சூத்திரர் மற்றும் ஆதிசூத்திரர் கல்வி மேம்பாட்டு கழகம் புனே* (Society for promoting the Education of mahars Etceteras) *இவற்றை நிறுவி நிர்வகித்தனர் இதற்கு புலேயின் நண்பர்கள் பெரிதும் உதவி செய்தனர்.இந்த கல்வி நிறுவனங்கள் மூலம் நிறையப் பள்ளி மாணவர்கள் பயன் பெற்றனர். பிற்காலத்தில் இவற்றை சாவித்திரிபாய் மற்றும் பாத்திமாபேகம் இருவரும் இணைந்து நடத்தினர்.*

**இந்தியாவின் முதல் பெண் தலைமை ஆசிரியர்**

*1848-ல் எல்லோரும் படிக்கும் பள்ளியை புலே புனேயில் உள்ள பீடே வாடா என்ற இடத்தில் துவங்கினார். இந்த பீடே வாடா என்ற இடத்தின் சொந்தக்காரர் தாத்யா சாகேப் என்பவராவார். இவர்சாவித்திரிபாய்,ஜோதிராவ்புலே மற்றும்சகுணாபாய்மூவரின் செயல்பாடு கண்டு மகிழ்ந்து பீடேவாடா இடத்தை பள்ளித்தொடங்கக் கொடுத்தார். பார்ப்பனரைத் தவிர அனைத்து சாதியினருக்கும் என உருவாக்கப்பட்ட இந்தியாவிலேயே முதல் பள்ளி இதுதான். இப்பள்ளி ஒன்பது மாணவர்களோடு தொடங்கப் பட்டது சாவித்திரிபாய் அதன் தலைமையாசிரியராக இருந்தார். அகமத் நகரிலிருந்து சதாசிவ கோவிந்தே பாட புத்தகங்களை அனுப்பி வைத்தார். இப்பள்ளி இந்தியக் கல்விமுறையை மட்டும் மாற்றி அமைக்கவில்லை அதன் பாடத்திட்ட முறைகளையும் மாற்றிக் கல்விக் கொடுத்தது.*

*இங்கு பாரம் பரியமான பார்பனர்களின் கல்வியான வேதமும் மற்றும் சாஸ்திரமும் சொல்லித்தராமல், வாழ்க்கைக்கும், நவீனவாழ்வியலுக்கும் தேவையனகணிதமும், அறிவியலும் மற்றும் சமூக அறிவியலும் அந்தப் பள்ளியின் மாணவர்களுக்குக் கற்றுத்தரப்பட்டன. இப்பள்ளியில் சாவித்திரிபாய் பள்ளியின் பொறுப்பை ஏற்று இந்தியாவின் முதல் பெண் ஆசிரியரானார். இதே ஆண்டு அப்பள்ளியின் முதல் பெண் தலைமையாசிரியராகவும் ஆனார்.*

*அருமையான இச்சூழலில் சமூகம் அவரை நிம்மதியாகக் கல்வி போதிக்க விடவில்லை. மேல்தட்டு வர்க்கத்தினரின் ரவுடிக்கும்பல் அவரை நிம்மதியாய்ப் பள்ளி செல்லவோ பாடம் நடத்தவோ விடவில்லை. மேலும் கல்வி போதிப்பதற்காக அனைத்து சமூகப் பிரிவினரிடமிருந்தும் இந்த இளம் தம்பதியர் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டனர். பள்ளி ஆசிரியராகச் சென்ற சாவித்திரிபாய் மீது சேற்றையும், மலத்தையும் வீசியடித்தனர். பல வழிகளில் இழிப்படுத்தினர். அனைத்தையும் துணிவோடு எதிர்கொண்டனர். இதற்கு கணவர் புலே நம்பிக்கைக் கொடுத்தார். தொடர்ந்து பள்ளி செல்கையில் வீசப்படும் அசிங்கத்திலிருந்து காத்துக்கொள்ள பழைய சேலையை உடுத்திச் செல்வார். பள்ளிக்குச் சென்றதும் வேறு சேலையை மாற்றிக்கொள்வார்.*

*இறுதியாக தனக்குத் தொல்லை தந்து வந்தவர்களின் ஒருவரின் கன்னத்தில் அறைய வேண்டிய அளவிற்கு அவர் நிர்பந்தத்திற் உள்ளானார். இதனால் சமூகப் புறக்கணிப்பு ஏற்பட ஜோதிராவ் புலேவின் தந்தை 1849 -ஆம் ஆண்டு நடந்த சம்பவத்தை முன்னிறுத்தி வீட்டிலிருந்து வெளியேறும்படி செய்து விட்டார். சிக்கல் உச்சக்கட்டம் அடைந்திருந்த சூழலில் தொல்லைகளை இருவரும் துணிவோடு எதிர் கொண்டனர். கல்விப் பணியிலிருந்து இருவரும் பின் வாங்காமல் சென்றனர்.*

*இந்நிலையில் ஊருக்கு வெளியே ஒரு வீட்டில் எளிமையான வாழ்க்கையைத் துவங்கினர். அப்பொழுதும் கல்விப் போதிப்பதை நிறுத்தவில்லை. அவர்களுக்குப் புத்தகக் கல்வியுடன் ஓவியம், தையல், மற்றும் சமூகப் பயன்பாடுள்ள வேலைகளைக் கற்றுக் தந்தனர். ஏராளமான விதவைகளுக்கு மறுமணம் செய்து வைத்தனர். இவர்களது கல்விப் பணிக் குறித்து ஒரு அறிக்கை பின்வறுமாறு கூறுகின்றது.*

*“நிதிப் பற்றாக்குறையின் காரணமாகச் சொற்ப ஊதியத்தில் பள்ளி நிர்வாகம் ஆசிரியர்களை நியமித்து வந்தது. வேறு நல்ல வாய்ப்புக் கிடைத்தும் அந்த ஆசிரியர்கள் இந்தப் பணியைக் கைவிட்டுவிடுவார்கள். ஆனால் இப்பள்ளின் தலைமை ஆசிரியரான சாவித்திரிபாய் எந்த விதமான ஊதியமும் இன்றி தன்னை அர்பணித்துக் கொண்டார்”. 1851 -ஆம் ஆண்டின் இறுதியில் புனேயில் கணவர் ஜோதிபாவுடன் இணைந்து மூன்று பள்ளிகளை துவங்கினார். மூன்று பள்ளிகளிலும் சேர்ந்து மொத்தம் 150 மாணவர்களுக்கு மேல் படித்தனர். இது அரசு பள்ளியின் எண்ணிக்கையைவிட அதிகமாகும். இங்குள்ளப்பாடத்திட்டமும் அரசுப் பள்ளிப் பாடத்திட்டத்தைவிட மேம்பட்டதாக இருந்தது. அதற்கும் மேலாக அரசுப் பள்ளியில் கல்விப் பயிலும் ஆண் மாணவர்களைவிட இங்குப் பயிலும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.*

**பெண் கல்வியின் அன்னை**

*19-ம் நூற்றாண்டின் அனைத்து சமூகத் தடைகளையும் உடைத்து நொறுக்கி தூக்கி எறிந்தவர் சாவித்திரிபாய். டெல்லி பல்கலைக் கழக நிறுவனத்தின், உலகலாவிய ஆய்வுகள் பற்றி* (Global studies at university Institute in New Delhi, India) *ஆராய்ந்து பணிபுரியும் பேராடாம் உல்ப் என்பர் ஆயிகோஸ் என்ற உலக பத்திரிகையில்* (published in Oikos world views journal, 2008) *ஜான் கொமேனிஸ் ஐரோப்பாவின் நவீனக்கல்வியின் தந்தை என்றும் சாவித்திரிபாயை.*

*இந்தியாவின் நவீனக் கல்வி மற்றும் பெண் கல்வியின் அன்னை என்று குறிப்பிடுகிறார். இப்படி சாவித்திரிபாய் அவர்களை உலக அளவில் ஒப்பிட்டு எழுதியிருக்கிறார் என்றால் சாவித்திரிபாய் பெண்கல்விக்கு அளித்துள்ள பங்களிப்பை எண்ணிப்பார்க்க வேண்டும்.*

**பிரிட்டிஷ் அரசின் பாராட்டு**

*சாவித்திரிபாயும் இவர் கணவர் ஜோதிபாவும் மாஹாராஷ்டிராவில் மொத்தம் 18 இடங்களில் அனைத்து சாதியினருக்கும் இளம் விதவைகளுக்கும் பாலியல் வல்லுறவின் மூலம் பிறந்தக் குழந்தைகளுக்கும்,ஒடுக்கப்பட்ட அனைத்துப் பிரிவினருக்குமெனக் கல்வி கொடுக்கப் பள்ளி தொடர்ந்து செயல் படுத்தினர்.இதில் 150 பெண்களும்100 ஆண்களும் படித்தனர்.மேலும் இந்த பள்ளிகளில் கல்வியும் தரமாக இருந்தது. இந்த பள்ளிகள் அரசு பள்ளிகளைவிட தரமான சிறந்தக் கல்வியைக் கொடுத்தனர்.இதனால் இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் ஈர்க்கப்பட்டனர் இதனால் 1852,நவம்பர் 14 ல் பிரிட்டிஷ் அரசு ஜோதிராவ் புலே மற்றும் சாவித்திரிபாய் இருவருக்கும் சிறந்த ஆசிரியர்கள் என்ற பாராட்டை கொடுத்தனர்.*

**முதல் கருக் கொலைத்தடுப்புக் காப்பகத்தின் முன்னோடி**

*ஜோதிபாவுடன் இணைந்து புராட்சிகரப் பணிகளைச் செய்தார் இதனால் ஒடுக்கப்பட்ட மக்களும் ஏழைகளும் அவரை மனதார நேசித்தனர்.பெண்களுக்கு அதிகாரத்தைக் கையளிப்பதில் குறிப்பாக விதவைகளின் முன்னேற்றத்தில் தனிச்சிறப்புக் கவனம் செலுத்தினர்.குழந்தைத் திருமணம் சமூகத்தில் சாதாரராண நிகழ்வாக இருந்தது.சிறுமிகளும் இளம் பெண்களும் தங்கள் கணவன்மார்களின் மரணத்தின் காரணமாக விதவைகளாகும் சம்பவங்கள் அடிக்கடி நடந்தன. விதவைகளின் வயதை கணக்கில் கொள்ளாமல் அவர்களை அமங்களமானவர்களாகக் கருதுவது, சமூகரீதியாகப் புறக்கணிப்பது போன்ற நடைமுறைகள் கண்டிப்புடன் பின்பற்றப் பட்டன.*

*இதானால் பல்வேறு இன்னல்களை குறிப்பாக பாலியல் தொந்தரவுகளை சந்தித்தனர். அவர்கள் கர்ப்பிணியாக ஆகக்கூடியச் சூழல்களும் நடந்தேறின. பல அவமானங்கள் ஏற்பட்டன. இச்சூழலில் 1853 -ஆம் ஆண்டில் மணமாகாத பெண்களும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் கொள்ளப்படும் குழந்தைகளுக்கானத் தடுப்பு இல்லம் தொடங்கினார். இவ்விடுதி தொடங்கப்பட்டதால் பல குழந்தைகள் காப்பாற்றப் பட்டனர்.பெண்களுக்குப் பாதுகாப்பான ஒரு இடம் கிடைத்தது. இந்த விடுதியில் சேர்ந்தப் பெண்களை சாவித்திரிபாய் தாயன் போடு பார்த்துக் கொண்டார்.*

*பாலியல் வல்லுறவின் மூலம் பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்றுவது இதன் குறிக்கோள். பாலியல் மூலம் கருத்தரித்தக் குழந்தைகளைக் கருவுற்ற தாய் கொன்றுவிடுவாள். அல்லது கொல்வதற்கு நிர்பந்திக்கப்படுவாள். புனே நகரிலும் அருகிலுள்ளக் கிராமங்களிலும் ஏராளமான இளம் விதவைகள் இருந்தனர் வல்லுறவிற்கு உட்படுத்திவிட்டு அதன் மூலம் உருவாகும் கரு பிரச்சனையாகி கொலை செய்யப்படும் இதனைத் தடுப்பதற்காகவே இவ்வில்லம் தொடங்கப்பட்டது.*

*இது மருத்துவ மனை மற்றும் காப்பக மாகச் செயல்பட்டது. இங்கு கருவுற்ற எந்தப் பெண்ணும் இங்கு வந்துத்தங்கி குழந்தைப் பெற்றுச் செல்லலாம். இதுதான் இந்தியாவின் முதல் கருக்கொலைத்தடைக் காப்பகம்.*

**சமூக நீதி காப்பாளர்**

*தீண்டத்தகாத தலித்துகளின் நிழல் பட்டால் தீட்டு என்று மனுநீதியையே வாழ்நாளின் நிதர்சன வாழ்க்கையாகக் கொண்டு சென்ற வர்க்க கட்டமைப்புள்ள சமூகச்சூழலில் வாழ்ந்தவர் சாவித்திரிபாய் புலே. தாகம் கொண்ட வாய்க்கு தண்ணீர் கூட கொடுக்கக்கூடாது என்று ஒதுக்கிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்ட சமூக மக்களுக்கு 1968 -களில் பொதுக் கிணற்றிலிருந்து நீர் தர ஊர் மக்கள் மறுத்தனர். அத்தகு கொடுமையை எண்ணி தங்கள் வீட்டுக் கிணற்றிலே எல்லா ஒடுக்கப்பட்ட மக்களும் தண்ணீர் எடுக்க அனுமதித்தார். இச்செயல் அன்றைய கால கட்டத்தில் பார்ப்பன வர்க்கத்துக்கும் பல நூற்றாண்டுகளாகப் போதித்த மனுதர்ம விதிக்கும் விடப்பட்ட மிகப் பெரிய சவாலகும்.*

**பெண்ணியக் காப்பாளர்**

*1852-ல் இவர் தொடங்கிவைத்த மஹிளா சேவா மண்டல் (பெண்கள் சேவை மையம்) மனித உரிமைகள் சமூக அங்கிகாரம் போன்ற சமூக விடயங்கள் குறித்துப் பெண்களிடம் விழிப்புணர்வை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டது.1873-ல் ஜோதிராவ் புலே சத்ய சோதக் சமாஜம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கினார்.இதில் சாவித்திரிபா புலே பெண்களுக்கு தலைமையேற்கும் பங்கு வகித்தார். இதில் 90 பெண்கள் இருந்தனர்.பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டே இப்பணியையும் செய்து வந்தார். இது ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமை கோரும் விடுதலைத் தேடிய அமைப்பாகும். தனது சேவையின் ஒரு பகுதியாக திருணங்களின் போது பெண்களைப் படிக்கவைப் பேன் என மாப்பிள்ளைகளை மணமேடையில் உறுதிமொழி எடுக்கவைத்தார்.*

**செயல் போராளி**

*மாகாராஷ்டிராவில் 1870-ல் கடும் பஞ்சம் ஏற்பட்டது அடித்தட்டு மக்களும் குழந்தைகளும் பட்டினியால் வாடினர் குழந்தைகள் பசியோடு தவிப்பதைக் கண்ட சாவித்திரிபாயின் இதயம் அழுதது பஞ்சத்தால் பெரியவர்கள் இறந்தனர்.ஏராளமானக் குழந்தைகள் அனாதையாயினர் அவர்களுக்காகவே 52 உறைவிடப் பள்ளிகளை புலே தம்பதியர் மிகப்பெரிய சமூக, பொருளாதார சவால்களுக்கு மத்தியில் தொடங்கினர்.இவர்கள் 1876 -1898 களில் பஞ்ச காலத்தில் மக்களுக்கு பெரிதும் உதவினர். அப்போது மகாராஷ்டிரத்தில் 90 இலவச உணவு விடுதி நடத்தி மக்களுக்கு உணவளித்தனர்.*

*சாவித்திரிபாய் தன் கணவர் ஜொதிராவ் புலேவுக்கு அவசிய அவசர தேவைகளை முன்னிட்டு கடிதங்கள் எழுதும் பழக்கம் உள்ளவர். மகராஷ்டிரத்தின் பஞ்சகாலத்தில் தனது குழுவினருடன் பணியாற்றக் கிளம்பிய சாவித்திரிபாய் புனேவிலிருந்து ஜோதிராவ் புலேவுக்கு தொடர்ந்து பல கடிதங்களை எழுதி அனுப்பினார். அவை காதல் கடிதங்கள் இல்லை. மனிதக்காதல் இப்படியும் இருக்குமென்ற கருத்தில் புரட்டிப்போட்டக் கடிதங்கள் அவை. இவர்களுக்குள் நடந்த கடிதப் போக்குவரத்துகள் சமூகம் சார்ந்தே இருந்தது. குறிப்பாக 1877-ல் மராட்டியப் பஞ்சகாலத்தில் சாவித்திரிபாய் மிகவும் மனமுடைந்து எழுதியக் கடிதங்கள் அன்றை சமூக அவலங்களின் சாட்சியாக உள்ளன அதே நேரத்தில் மனித நேயத்தைப் படம்போட்டுக்காட்டுவதாகவும் உள்ளன.*

*1877-ல் இவர் தனது கணவருக்கு எழுதியக் கடிதத்தில் பஞ்சத்தால் மக்கள் தனது சிறுநீரைத் தானேக் குடிக்கும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை வேதனையுடன் தெருவிக்கிறார். மேலும் இதைவிடக் கொடியச்செயல்கள் நடந்ததையும் கடிதத்தில்*

*குறிப்பிடுகிறார். பற்பல நூற்றாண்டுகளாக கல்வி பார்ப்பனர்களின் ஏகபோக உரிமையாக இருந்த ஒரு சமூகத்தில் உழைக்கும் மக்களை ஒடுக்கவும், அடிமைப்படுத்தவும், அவர்கள் மத்தியில் அவ நம்பிக்கையை ஏற்படுத்தவும் கல்வியை ஒரு கருவியாகப் பயன் படுத்தி வந்த ஒரு சமூகத்தில் கல்வி குறித்தும் அதன் விடுதலைப் பங்கு குறித்தும் முதல் கடிதம் பேசுகிறது,*

*இதோடு மகர், மங் சாதி மக்களுக்கும் அவர்கல்விக் கற்றுத்தந்ததை -அவற்றுக்கான நியாயங்களை சாவித்திரிபாய் இக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடுகிறார். மேலும் கல்வியின் முக்கியத்துவம் அதன் சிறப்பு குறித்து" கல்வி கற்காமல் இருப்பது மனித இயல்புக்கே விரோதமானது. பார்ப்பனர்களின் உயர்ந்த அந்தஸ்திற்கு அவர்கள் கல்வியறிவு பெற்றிருந்ததேக் காரணமாகும். கல்வியும் அறிவும் மிகவும் உன்னதமானவையாகும் ஒருவர் கல்வியறிவு பெற்றால் தன்னுடைய தாழ்ந்த நிலையிலிருந்து விடுபட்டு உயர்ந்த இடத்தை அடையலாம்.என்று தனது கடிதவுரையை முடிக்கிறார்.*

*அதே சமயம் காலம் எவ்வளவு பெரிய இடரை ஏற்படுத்தினாலும் நமது செயல்கள் தடைபடக் கூடாது என்ற பதிவையும் அவர் கடிதத்தில் காணமுடிகிறது.எதையும் நேர்ப் பட சந்திக்கும் செயல் மங்கையாக வீரமங்கையாக சாவித்திரிபாய் செயல்பட்டார். அவரின் துணிவும் செயலும் ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் இருக்கவேண்டியதாகும்..*

**மாராட்டிய முதல் பெண் கவிஞர்**

*சாவித்திரிபாய் தான் வாழ்ந்த காலத்தில் ஒரு முக்கியமான ஆளுமையாக விளங்கினார். அதே சமயம் தனது கணவருக்கு உற்ற தோழியாக விளங்கினார்.*

*தன்னுடைய சொந்த முயற்சியால் புரட்சிகர தலைவராகவும் விளங்கினார். இதுவே இவரை எழுத்தாளர் நிலைக்கு உயர்த்தியது. மராத்தியத்தின் நவீன கவிதைப் போக்கு இவரிலிருந்தே தொடங்குகிறது. வரலாற்றிலேயே. இயற்கை, சமூகம், வரலாறு, கல்வி என்று பல்வேறு தளங்களில் இவரின் கவிதைகள் பயணிக்கின்றன.1854-ல் இவரது கவிதைத்தொகுப்பான கவிய பூலே (கவிதை மலர்கள்) பிரிட்டிஷ் அரசின் அங்கிகாரத்துடன் வெளிவந்தது. 1891-ல் "பவன் காசி சுபோத் ரத்னாகர்" (தூய முத்துக்களின் கடல்) இதில் புலேவின் வாழ்க்கை வரலாறு கவிதை வடிவில் சொல்லப்பட்டது. அங்கிலேயர்களால் தூக்கியெறியப் பட்ட பேஷ்வாக்களின் ஆட்சியை அழுகிப்போன அடக்குமுறையின் ஆட்சி என்று புலே வருணித்திருந்தார். இக்கருத்துக்களைத் தன்னுடையக் கவிதைகளில் சாவித்திரிபாய் வலியுருத்தியிருந்தி எழுதியுள்ளார்.*

*நவீன இந்தியாவில் புத்தகம் வெளியிட்ட முதல் பெண் இவராகத்தான் இருப்பார். அனைத்து வர்க்கங்களைச் சேர்ந்தப் பெண்களுமே மற்ற மனித உயிர்களைவிட கேவலமாக நடத்தப் பட்டுவந்தச் சூழலில் சிறுவயதிலையே திருமணம் செய்துவைக்கப்பட்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து கணவனுக்கு அடிமையாக, கணவன் இறந்தபின் குடும்பத்தாரின் மற்ற ஆண்களுக்கு அடிமையாக பெண்கள் வாழ்ந்து மடிந்து வந்த சூழலில் தனக்கென ஒரு சொந்தக் கருத்தையும் அதைவெளிப்படுத்துவதற்கான வழியையும் பெற்றிருந்தார்.*

**காலம் வென்ற முற்போக்கு நாயகி**

*சாவித்திரிபாயின் கணவர் 1890-ல் உடல் நலக் குறைவால் இறக்க நேரிடுகிறது. சாவித்திரிபாய் இந்த அழுகிப்போன பிற்போக்குத்தனமான சமூகக்கட்டுப்பாடுகளை உடைத் தெரிந்துவிட்டு தானேதன் கணவன் உடலுக்கு தீ மூட்டினார். இறுதிச் சடங்கை தானே செய்யும் கம்பீரத்தைப் பெற்றார். பூக்களல்லப் பெண்கள் புயலாகவும் இருப்பார்கள் என்று புரட்சி செய்து*

*காட்டியவர். தனது கணவரின் சிதைக்குத் தானே எரியூட்டுவது என்று அவர் எடுத்த முடிவானது-அதிகப்பிரசங்கித்தனம் என்று இன்று கூடக் கருதும் இம் முடிவானது. அன்று நாடு முழுவது அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும். ஆயினும் சாவித்திரிபாயின் தன்நம்பிக்கையை தனித்துவத்தை அறிந்து கொள்ள இந்த ஒரு செயலே போதுமானது. இது கணவனுடைய வழியிலேயேச் செல்லக் கூடிய மரபான பதிவிரதை அல்ல இவர் என்பதை மெய்பித்துக்காட்டும் செயல்.*

*தன்னுடை கணவருடன் சமநடை பயின்று உயரேச் செல்ல முடிவு செய்த சாவித்திரிபாயின்வாழ்க்கைமுலமாகத்தான்இந்தியப்பெண்கள்தங்களைத்தாங்களேவிடுதலை செய்து கொள்ளும் உண்மையான தருணங்கள் தொடக்கம் பெறுகின்றன.பத்தொன்பதாம் நூற்றாண்டின் சாதி வர்க்கம் பாலினம் என்ற பாலினத் தடைகளால் இவரைப் பயணிக்க வைக்க முடியவில்லை. சாவித்திரிபாய் தான் வாழ்ந்த காலத்தில் மிக முக்கியமான ஆளுமையாக விளங்கியவர். தன் கணவருக்கு உற்ற தோழியாக விளங்கி தன்னுடைய சொந்த முயற்சிகள் மூலம் புரட்சிகரமானத் தலைவராகவும் விளங்கியவர்.*

*இவர் வாழ்ந்த சமூகச் சூழலில் சாதி வர்க கொடுமைகள் ஒரு புறம்.மறுபக்கம் பெண்கள் அவமரியாதைக் குள்ளாக்கப் பட்டார்கள். ஜடப்பொருள்களைப் போல் நடத்தப்பட்டார்கள். குடும்ப வேலைகளையும், குடும்ப வருமானத்திற்கான வேலைகளையும் செய்து வந்தனர். இதோடு குடும்ப பாலியல் தேவையைப் பூர்த்தி செய்பவர்களாக வாழ்வேண்டிய சூலலேயொழியப் பொதுவாழ்க்கையில் எந்தவொரு பங்களிப்பும் இல்லையாக இருந்தது. இதனைக் கட்டுடைப்பு செய்ய தன்னை முழுவது மாக பொதுவாழ்க்கைக்குக் கொடுத்தவர் ஜோதிபாய்.இத்தகு பெண்மணி1893-ல் சாஸ்வத் என்ற இடத்தில் சமாஜத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார் 1896-ல் பஞ்ச நிவாரனப் பணிக்கு பிரிட்டிஸ் அரசை நிர்பந்தித்து வெற்றியும் கண்டார். சொல்லும் செயலுமாக வாழ்ந்து காட்டியவர்.*

**பெண் விடுதலையாளர்களின் முன்னோடி**

*ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றிய தங்கள் வரையறையில் புலே தம்பதியர், ஏனைய விளிம்பு நிலை மக்கட் பிரிவினரான பழங்குடிகளையும் முஸ்லிம்களையும் சேர்த்தேப் பேசி வந்தனர். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முந்தைய இந்திய நிலமையில் ஆணாதிக்கத்தைச் சாதியோடு இணைத்துப் பார்த்தவர் சாவித்திரிபாய் புலே மட்டும்தான். பெண்களின் மனித உரிமைகள் குறித்தும் மற்ற சமூகப் பிரச்சனைகள் குறித்தும் பெண்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டும் அறிவுசார்செயல்பாடுகளையும்,சாதி-எதிர்ப்புக்காகவும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் களமிறகிப் போராடத்தயங்காத களச்செயல்பாடுகளையும் துணிந்து மேற்கொண்ட ாவித்திரிபாய் புலேதான் பின்னாளில் இந்தியாவில் தோன்றிய பெண் விடுதலையாளர்கள் அனைவருக்கும் முன்னோடி. செயல் போராளியும் ஆவார்.*

**இறுதி வாழ்வியல் தருணங்கள்**

*இந்தியாவில் பஞ்சகாலமான 1876-1878-ல் ஏற்பட்ட நெருக்கடிகளைப் போக்குவதற்குத் தமது கணவரோடு கடுமையாக உழைத்ததோடு மக்களின் துயரங்கள் தீர்வதற்கான பல்வேறு ஆலோசனைகளையும் முன் வைத்தார் சாவித்திரிபாய்.*

*பல மையங்களில் ஜாதிய வேற்றுமைகளைப் பாராட்டி ஒடுக்கப்பட்டு மறுக்கப்பட்ட நிலையிலிருக்கும் மக்களுக்கு தன் கணவர் ஜோதிபாவுடன் இணைந்து இலவச உணவு பரிமாறினார். மகாராஷ்டிராவை பிளேக் நோய் கடுமையாகத் தாக்கியபோது ஆங்கில அரசு*

*கடுமையானச் சட்டங்கள் வழி பாதிக்கப்பட்ட மக்களைப் பிரித்து வைத்தது. இளம் பார்ப்பன விதவையின் மகன் யஸ்வந்த்ராவை தத்துப் பிள்ளையாக வளர்த்தனர் அவர் மருத்துவம் படித்து இராணுவத்தில் தென் ஆப்பிரிக்காவில் பணியில் இருந்தார்.அவர் விடுமுறைக்கு வந்திருந்தார் அப்போது அவரை ஹாடாஸ் பூரில் 1897-ல் ஊருக்கு வெளியே மருத்துவ மனைத் துவங்கவைத்தார்.*

*அச்சூழலில் சாவித்திரிபாய் தானே பலரைத் தூக்கிக் கொண்டு தனது அறுபத்தியாறு வயதிலும் மனித நேயம் காக்க மனித உயிர்கள் காக்கப் போராடினார். இச்சூழலில் பத்து வயது சிறுவன் பாண்டுரங் பாபாஜியைக் காக்கத் தூக்கிக்கொண்டு வந்த பொழுதுதான் பிளேக் நோய்த் தொற்று ஏற்பட்டது. அதேசமயம் அவர் கொண்டுவந்து சேர்த்த சிறுவன் பிழைத்துக்கொண்டான். மறுபடியும் ஒருவரைத் தூக்கிக்கொண்டுபோய் மருத்துவ மனையில் சேர்த்துவிட்டு மருத்துவமனை வாசலிலேயே மயங்கி விழுந்தார்.*

*இப்பொழுதும் இவர் கொண்டு வந்த சேர்த்தவர் பிழைத்துக் கொண்டார் அவர் தான் பெண் கல்விக்காக பள்ளிக்கூடம் துவக்கியோர்களை எதிர்த்து போராட்டம் செய்த கங்காரம். கங்காரம் பிழைத்த பின்னர்தான் தான் சாவித்திரிபாயால் காப்பாற்றப்பட்டவர் என்பது தெரியவந்தது. நன்றி சொல்ல ஓடோடி வந்தார் ஆனால் வெள்ளைத் துணியால் போர்த்தப் பட்டிருந்த சாவித்திரிபாயின் உடலைக் கங்காராமுக்கு விளக்கிக் காட்டினார்கள். பிளேக் நோயினால் பாதிக்கப்பட்டு உயிர்துறந்த சாவித்திரி பாயின் உடலைப் பார்த்து பெண்கல்விக்கு எதிரான கங்காராம் தலையில் அடித்துக்கொண்டு அழுது புலம்பினார் கதரினார். பிளேக் என்ற பெரும் தொற்றால் 1897-ல் மார்ச் 10 -ல் இவ்வுலக வாழ்விலிருந்து விடுவித்துக்கொண்ட சாவித்திரிபாய் என்றைக்குமாக அவர் ஆற்றிய அரியச் சேவைகளை நினைவுகளால் நினைத்து, கொண்டாட்டத்திற்கு உரியவராய் நமது மனங்களில் இருத்திக் கொள்வதுதான் அவருக்கு நாம் செய்யும் ஆகச்சிறந்த நன்றியாகும்.*

**பெருமைப் படுத்திய அரசு**

*இந்திய அஞ்சல் துறை சாவித்திரிபாயைப் பெருமைப் படுத்தும் விதமாக 1998-ஆம் ஆண்டு அவரின் படம் போட்ட அஞ்சல் தலையை வெளியிட்டது. மாஹாராட்டிர அரசு ஜனவரி 3-ம் நாளை பெண்கள் தினமாக அனுசரிக்கிறது. மஹாராட்டிரத்தின் புனே பல்கலைக்கழகத்தை அந்த அரசு மாற்றி சாவித்திரிபாய் புலே பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டி அவருக்கு மரியாதை செய்துள்ளது. புனே நகர மாநகராட்சி சாவித்திரிபாய் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் விதமாக அவரின் பெயரில் 1983-ல் நினைவகம் அமைத்துள்ளது.*

***“உன்னில் நம்பிக்கைக் கொள்
விழித்திரு உழைத்திரு
கல்வி இல்லையேல் எதுவுமல்லை
ஞானம் இல்லையேல் மிருகங்களே மிச்சமாகும்
அறிவினைத்திரட்டிக்கொள்
ஒடுக்கப்பட்டவர் துன்பம் நீக்கு
ஆழ்மணல் தங்கத்துகள் போல்தான் கற்றலும்
கற்றுக்கொள்,
அறிவின் ஆதிவரை சிந்தித்திரு
சாதி என்னும் சங்கிலியை அறுத்து எறி
ஆதிக்கம் எனும் சொல்லை தூர வீசு. (சாவித்திரிபாய் புலே)***

*சொல்லைச் செயலாக்கி வாழ்ந்து சிறந்த செயல் போராளியின் வழியில் நாமும் பயணிப்போம் வாழ்வின் உன்னதம் போற்றுவோம்.*

**துணைநின்ற நூல்கள்**


1. *சாவித்திரிபாய் புலே.பேரா. சோ. மோகனா*
2. *மறக்கப்பட்ட விடுதலைப் போராளி. தொகுப்பாசிரியர்*
3. *பிரஞ்சன் மணி,பமீலா சர்தார்.*
4. *தமிழில் வெ.கோவிந்தசாமி.*
5. *ஞ*